1992 மார்ச் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 368. திரு. சி. தாமோதரன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

368 —

நெல்லிக்குப்பம் பேருந்து நிலையம்.

* 4225—திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லிக்குப்பம்நகரத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நகராட்சி அலுவலக வளாகத்தில் மாநில நகர்ப்புற ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் அமைக்க வடிவமைப்பு, வரை படங்கள் தயாரிக்கப்படுவதற்கு நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நகராட்சியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இடம் அதிக அளவுக்குப் பேருந்துகள் வந்துபோக வசதியாக இராது. அதோடு அந்த இடம் நகரத்தின் மத்தியில் இல்லாமல் ஒதுங்கி உள்ள இடமாகும். எனவே நகரத்தின் மையப் பகுதிக்கு மாற்றினால் அதிக வருவாய் நகராட்சிக்கு வருவதோடு, பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும். எனவே இதுபற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏதாவது இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்வு செய்து கொடுத்தால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகராட்சி மிகவும் குறைந்த வருவாய் உள்ள நகராட்சி. பேருந்து நிலையத்தை அங்கே கட்டும்போது நகராட்சியின் வருமானத்தைப் பெருக்குகின்ற வகையில் கடைகள் கட்டி அமைத்தால் வருவாய் பெருகும். எனவே, நகராட்சியின்

[1992 மார்ச் 26

மையப் பகுதியாகிய காவல் நிலையத்திற்குப் பக்கத்தில் தனியாருக்குச்சொந்தமான காலியிடத்தைக்கையகப்படுத்தி, அங்கே பேருந்து நிலையம் அமைக்க எதையும் திறம்பட முடிக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அது பற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 369. திரு. இரா. நடேசன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

369—

கூட்டுறவுச் சங்க நியமன உறுப்பினர்களின் நியமனம் ரத்து

* 452—திரு. இரா. நடேசன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடாக நியமிக்கப் பட்ட நியமன உறுப்பினர்களின் நியமனங்களை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). தொடக்கநிலை கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக்கள் 28–7–1991 அன்று தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1991-ன் மூலம் ஏற்கெனவே கலைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 370—டாக்டர் ஜி. ஆர். மாலா. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.